[1972 நவம்பர் 13

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : இந்தத் தொகை என்ன நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவலர் குடியிருப்புகளில் கட்டடங்கள், செய்தித்தாள்கள், வார, மாதத் தாள்கள் வாங்க மானியம் கொடுத்தல் ; காவலர்களுடைய குழந்தைகளின் படிப்பிற்கு உதவித் தொகை அளித்தல், காவல் துறையில் பணி புரிந்து இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளித்தல்; நீண்டநாள் நோய், உயிருக்கு ஆபத்தான காயம் போன்ற நிலைமைகளில் உதவி அளித்தல் ; திடீர் மரணமடைந்தவர்களுக்கு ஈமச் சடங்குகளுக்கு நிதி உதவி அளித்தல் ; மத்தியக் குழு தகுதியானது என்று முடிவு செய்கிற பொது நலன்களுக்கும் ஏனைய காரியங்களுக்கும் நிதி உதவி செய்தல்.

THIRU D. SANTOSHAM : Sir, apart from these collections made from Gazetted Police Officers and non-Gazetted Police Officers, may I know whether any collection has been made from the public for this Police Benevolent Fund?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றித் தகவல் இல்லை.

Island Grounds

* 267. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether Hon. the Chief Minister has received any communication from the Hon. Union Minister for Defence about the construction of buildings on the Island Grounds during May 1972; and

(*b*) if so, the details thereof?

தீவுத் திடல்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தீவுத் திடலில் கட்டிடம் கட்டுவது பற்றி 1972 மே திங்களில் மத்தியப் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து மாண்புமிகு முதலமைச்சருக்குக் கடிதம் ஏதேனும் கிடைத்துள்ளதா ?

(இ) ஆமெனில் அதுபற்றிய விவரங்கள் யாவை ?

1972 நவம்பர் 13]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தீவுத் திடலில் கட்டிடம் கட்டும் பணி நிறுத்தி வைக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதென்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் தனது கடிதத்தில் அறிவித்துள்ளார். பாதுகாப்புத் துறையின் தேவைகளை நிறைவு செய்வதற்காக தகுந்த மாற்று நிலத்தை மாநில அரசின் ஒத்துழைப்புடன் தெரிந்தெடுக்கும்படி மத்திய அரசு இராணுவத் தலைமையிடத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது. அதற்கு இணங்க மத்திய அரசு அதிகாரிகளும், பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் அண்மையில் இது குறித்து என்னுடன் கலந்து பேசினர். தற்போது வேறு மாற்று இடம் கொடுப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

Special Pay for Tamil Pandits

*268 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any Second Grade Tamil Pandit serving in the Madurai Municipal High Schools has been asked to refund the special pay of Rs. 10 per month paid since 1965; and

(b) if so, the reasons therefor?

தமிழாசிரியர்களுக்குச் சிறப்புச் சம்பளம்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலைத் தர தமிழ் ஆசிரியர்கள் யாரேனும், 1965-ம் ஆண்டிலிருந்து மாதந்தோறும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு சம்பளமான ரூ. 10-ஐ திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பயிற்சி பெற்ற, மற்றும் பயிற்சி பெறாத இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு மேல் படிவங்களில் வகுப்பு நடத்துவதற்கு வழங்கப்படும் தனி சம்பளமாகிய ரூ. 10, 1960-க்குப்பின் நியமிக்கப்பட்ட இரண்டாம்